# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.
**Sessions Case No. 67/2025**

Prosecution Witness : **PW8**

| | | | |
|---|---|---|---|
| **Name** : | **S.பாரதி** | **Father's Name** | : |
| **Village** : | | **Taluku** | : |
| **Caste** : | | **Calling** | : |
| **Religion** : | | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 09th day of March 2026.

**(1ம் எதிரி விக்னேஷ், 2ம் எதிரி பிரதீப் ஆகியோர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள்.) (1, 2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது வெங்கமேடு காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வெங்கமேடு காவல்நிலையத்தின் உதவி ஆய்வாளர் கண்ணதாசன் கடந்த 30.10.2023 ஆம் தேதியன்று வரை வெங்கமேடு காவல்நிலையத்தில் பணிபுரிந்து தற்போது பணிமாறுதலாகி சிந்தமாணிப்பட்டி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறார். மேலும் அவர் நெஞ்சு வலி காரணமாக மருத்துவ விடுப்பில் சென்றுள்ளார். எனக்கு உதவி ஆய்வாளர் கண்ணதாசனின் கையொப்பம், கையெழுத்து நன்கு தெரியும். தற்சமயம் அவரால் நீதிமன்றத்தால் ஆஜராக முடியாத நிலையில் உள்ளதால் அவருக்காக நான் வழக்கு கோப்புகளை பார்த்து நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 31.10.2023 ஆம் தேதி காலை 9.00 மணிக்கு வாதி செழியன் என்பவர் வெங்கமேடு காவல்நிலையம் ஆஜராகி எழுத்துப்பூர்வமாக கொடுத்த புகாரைப்பெற்று உதவி ஆய்வாளர் காலை 9.00 மணிக்கு மனு ரசீது

கொடுத்துள்ளார். அந்த மனு ரசீதின் எண்.289/2023. பிறகு அன்றைய தினம் 10.45 மணிக்கு உதவி ஆய்வாளர் கண்ணதாசன் வெங்கமேடு காவல்நிலைய குற்ற எண்.401/2023, சட்டப்பிரிவு 3(1) TNPPDL Act ன் படி முதல் தகவல் அறிக்கையினை புகாரின் அடிப்படையில் பதிவு செய்துள்ளார். **அந்த புகார் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** பின்னர் அன்றைய தினம் உதவி ஆய்வாளர் கண்ணதாசன் அவர்கள் சம்பவ இடத்திற்கு சென்று தவமணி, கணேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வை மகஜர் இதுதான். அது அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யபடுகிறது. அந்த வரைபடம் இதுதான். அது அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேலும் மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் கண்ணதாசன் சம்பவ இடத்தில் இருந்த ஏடிஎம் இயந்திரத்தின் உடைந்த போன டிஸ்பிளே, பேனல் பாகங்களை ஒரு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியுள்ளார். **அந்த கைப்பற்றுதல் மகஜர் இதுதான். அது அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஏடிஎம் இயந்திரத்தின் உடைந்த பாகங்கள் இதுதான். அது ஏற்கனவே அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** பின்னர் சம்பவ இட சாட்சிகளான பிரபாகரன், குணசேகரன், கோகுலகிருஷ்ணன், பழனி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும் உதவி ஆய்வாளர் அவர்கள் வழக்கின் எதிரிகள் விக்னேஷ், மற்றும் பிரதீப் ஆகியோர்களை தேடி வந்தநிலையில் கடந்த 31.10.2023 ஆம் தேதியன்று அரசு காலனி பேருந்து நிறுத்தம் அருகே நின்று கொண்டிருந்த எதிரிகள் விக்னேஷ், மற்றும் பிரதீப் ஆகியோரை 13.45 மணிக்கு சாட்சிகள் காத்தமுத்து, சரவணன் ஆகியோர்

முன்னிலையில் காரணம் கூறி கைது செய்துள்ளார். மேலும் சாட்சிகள் காத்தமுத்து, சரவணன் ஆகியோர் முன்னிலையில் 1ம் எதிரி விக்னேஷ் தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமுலம் கொடுத்துள்ளார். அதனை உதவி ஆய்வாளர் மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். மேலும் 1ம் எதிரி விக்னேஷ் சம்பவத்திற்கு பயன்படுத்திய உருட்டுக்கட்டையை தனது வீட்டின் பின்புறமாக மறைத்து வைத்திருப்பதாகவும் தன்னை அழைத்துச்சென்றால் எடுத்து தருவதாக கூறியதன் அடிப்படையில் உதவி ஆய்வாளர் மற்றும் சாட்சிகளை தனது வீட்டிற்கு அழைத்துச்சென்று எடுத்துக்கொடுத்துள்ளார். அதனை உதவி ஆய்வாளர் ஒரு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியுள்ளார். **அந்த கைப்பற்றுதல் மகஜர் இதுதான். அது அ.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் எதிரி எடுத்துக்கொடுத்த உருட்டுக்கட்டை இதுதான். அது அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ஆம் எதிரி விக்னேஷ் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் எதிரிகள் இருவரையும் காவல்நிலையம் அழைத்து வந்து பாராகாவல் வசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். மேலும் வழக்குச்சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **அந்த படிவம் 91 இதுதான். அது அ.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் உதவி ஆய்வாளர் வங்கியிலிருந்து சேதமதிப்பீடு பெற்று நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் புகார்தாரர் செழியனை மீண்டும் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்துள்ளார். உதவி ஆய்வாளர் அவரது புலன் விசாரணை முடித்து 13.12.2023 ஆம் தேதி எதிரிகள் இருவர் மீதும் சட்டபிரிவுகள் 3(1) TNPPDL Act ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

தவமணி, கணேசன், காத்தமுத்து, சரவணன் ஆகியோர் முதல் விசாரணையில் கூறிய விவரங்களைத்தான் ஆய்வாளர் விசாரணையிலும் கூறியுள்ளார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

உதவி ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் சம்பவ இடத்திலிருந்து அ.சா.பொ.1 பொருட்களை சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. உதவி ஆய்வாளர் சாட்சிகள் தவமணி, கணேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜரும், மாதிரி வரைபடமும் மற்றும் கைப்பற்றுதல் மகஜரும் தயார் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. உதவி ஆய்வாளர் காத்தமுத்து, சரவணன் ஆகியோர் முன்னிலையில் எதிரிகள் இருவரையும் கைது செய்யவில்லை என்றும் அவர்கள் முன்னிலையில் 1ம் எதிரி எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றும் 1ம் எதிரி அ.சா.பொ.2 உருட்டுக்கட்டையை எடுத்து ஆஜர் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவொரு சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ.5 Tax Invoice வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. கண்ணதாசன் அவர்கள் சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் ஆகையால் தான் வங்கியிலிருந்த சிசிடிவி புட்டேஜ்களை கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2026.03.09 19:17:03 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.